பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 25 ஞாயிற்றுக்கிழமை 10.08.2025 கதிர் 274

### இது ரகசியம் அல்ல!

ஒரு காலத்தில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் முன்னணிச் செயற்பாட்டாளராகவும் ஜேவிபியின் நெருங்கிய சகாவாக இருந்தவருமான முன்னாள் ☞2

# படை முகாமிற்குள் அழைக்கப்பட்ட இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

## 3 இராணுவத்தினர் கைது

முல்லைத்தீவு மாவட்டம் முத்துஐயன்கட்டு இராணுவ முகாமிற்குள் அழைக்கப்பட்டனர் எனக்கூறப்படும் 5 இளைஞர்களில் ஒருவர் நேற்று முத்துஐயன் கட்டுக் குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டார். முகாமிற்குள் சென்றதும் தம்மை இராணுவத்தினர் துரத்தித் துரத்தித் தாக்கினர் எனவும் அவர்களிடமிருந்து தப்பியோடி தாம் முத்துஐயன்கட்டுக் குளப் பகுதி வழியாகவே தப்பி வெளியேறினர் என்றும் தப்பி வந்த மற்றவர்கள் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் 3 இராணுவத்தினர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை ஓகஸ்ட் 19 வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அதேவேளை, உயிரிழந்த இளம் தந்தையின் சடலத்தை உடற்கூறாய்வுக்கு எடுத்துச் செல்லுமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார். அதன்படி, உடலம் யாழ். ☞2

# இனப்படுகொலை வெறியில் ராணுவம் உள்ளவரை தமிழ் மக்களில் எவருக்குமே பாதுகாப்பு கிடையாது

## முத்துஐயன் கட்டு சம்பவம் தொடர்பில் கஜேந்திரகுமார் கருத்து

இராணுவம் தொடர்ந்தும் அதே இனப்படுகொலைவெறியில் இருக்கின்ற வரைக்கும், முல்லைத்தீவில் - வடக்குகிழக்கில் இருக்கின்ற எந்தவொரு தமிழ் மக்களிற்கும் பாதுகாப்பு இருக்கப்போவதில்லை என தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எங்களிற்குக் கிடைத்த தகவலின் படி இது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட கொலை. அவர் முகாமிற்கு சென்ற பிறகு அவரைக் கொலை செய்துதான் குளத்தில் போட்டிருக்கின்றார்கள் என அங்கிருக்கக்ககூடியவர்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

ஆட்சி மாற்றத்தின் பின்னரும் வடக்கு கிழக்கில் குறிப்பாக முல்லைத்தீவில், ஒன்றிற்கு இரண்டு என்ற அடிப்படையில்தான் இராணுவத்தினர் காணப்படுகின்றனர்.

ஒரு இராணுவசிப்பாய்க்கு இரண்டு ☞2

# பலஸ்தீன - இஸ்ரேல் போர் மனிதப் பேரழிவாக மாறுகிறது

## சஜித் பிரேமதாச கவலை

பலஸ்தீனத்திற்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான அதிகாரப் போர் தற்போது மனித பேரழிவாக உருவெடுத்து வருகிறது. இந்தப் பேரழிவை தடுப்பதற்கு அஹிம்சை மாத்திரமே ஒரே வழியாகும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

காசாவை இஸ்ரேல் இராணுவத்தின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவது தொடர்பான ☞2

# ஆள் எவருமற்று புங்குடுதீவில் கரையொதுங்கிய மர்மப் படகு

யாழ். மாவட்டம், புங்குடுதீவு கடற்கரை பகுதியில் ஆட்களற்ற நிலையில் மீன்பிடி படகொன்று நேற்றிர 07 மணியளவில் கரையொதுங்கியுள்ளது.

ஆட்களற்ற நிலையில் , படகினுள் மீன் பிடி வலைகள் காணப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, படகு தொடர்பிலான விசாரணைகளை அவர்கள் ஆரம்பித்துள்ளனர்.

# ரணிலின் முன்னாள் அதிகாரியை கைது செய்வதற்கு நடவடிக்கை

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளரும் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் மக்கள் தொடர்பு பணிப்பாளருமான துசித ஹல்லொலுவவை கைது செய்வதற்குக் கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

துசித ஹல்லொலுவ மற்றும் அவரது சட்டத்தரணி பயணித்த வாகனம் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் மற்றும் ஆவணம் திருடப்பட்டமை தொடர்பான விசாரணைகளின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அவர் தற்போது அவரது இல்லத்திலிருந்து தலைமறைவாகியுள்ளார் என்று கொழும்பு குற்றப்பிரிவு கூறுகிறது.

துசித ஹல்லொலுவ வசிக்கும் வீட்டிற்கும் கொழும்பு குற்றப்பிரிவின் ஒரு குழு சென்றுள்ளது, ஆனால் அவர் தற்போது அங்கு இல்லை ☞6

# மாகாண சபைத் தேர்தலை நடத்த முழு ஆதரவு வழங்குவதற்கு தயார்

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

மாகாணசபைத் தேர்தலை பழைய முறைமையில் நடத்துவதற்கு ஆளும்தரப்பு தீர்மானித்தால் அதற்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவதற்கு நாம் தயார். முடிந்தளவு விரைவாக தேர்தலை நடத்தி மக்கள் ஆட்சிக்கு இடமளிக்குமாறு ஆளும்தரப்பிடம் வலியுறுத்துவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தல் ☞2

# மாகாண சபை முறைமை, அதிகாரப் பகிர்வு தொடர்பில் யாழ்ப்பாணத்தில் கருத்தரங்கு

ஈபிஆர்எல்எவ் கட்சியின் ஏற்பாட்டில் மாகாண சபை முறைமையும் அதிகாரப் பகிர்வும் எனும் தலைப்பிலான கருத்தரங்கு நேற்றுக் காலை யாழ்ப்பாணம் 'ரில்கோ' விடுதியில் நடைபெற்றது.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையில் கருத்தரங்கு இடம்பெற்றது.

மாகாண சபைகளுக்குப் பகிரப்பட்ட அதிகாரங்களும் வரையறைகளும் எனும் தலைப்பில் இணைந்த வடக்கு-கிழக்கு மாகாண முதல்வரின் செயலாளர், கிழக்கு முதல்வர் சந்திரகாந்தனின் பிரதம ஆலோசகர் கலாநிதி க.விக்னேஷ்வரனும், மாகாண சபைகளுக்கு பகிரப்பட்ட நிதி அதிகாரங்களின் வீச்சும் எல்லையும் எனும் தலைப்பில் ☞2

# மருத்துவப் புறக்கணிப்பால் ஏற்பட்ட இறப்பு தொடர்பில் மன்னாரில் மூவர் நேற்று கைது

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்த மரியராஜ் சிந்துஜா என்ற பட்டதாரியான இளம் குடும்ப பெண் இறப்புடன் தொடர்புடையதாக பணி நீக்கம் செய்யப்பட்ட வைத்தியர் ஒருவர் உள்ளடங்களாக ஐவரில் மூவர் நேற்று சனிக்கிழமை (9) கைது செய்யப்பட்டுள்ளனர் என்று சட்டத்தரணி டெனிஸ்வரன் தெரிவித்தார்

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில் கடந்த வருடம் ஜீலை மாதம் 28 உயிரிழந்த மரியராஜ் சிந்துஜா என்ற பட்டதாரியான இளம் குடும்ப பெண்ணின் ☞2

# இன்று புலமைப் பரிசில் பரீட்சை

ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை நாடளாவிய ரீதியில் 2,587 பரீட்சை நிலையங்களில் இடம்பெறவுள்ளன. ☞2

# மன்னார் போராட்டத்திற்கு ஆதரவாக பேசாலை மக்களும் நேற்று பங்கேற்பு

மன்னாரில் மக்களின் எதிர்ப்பை மீறி 2ஆவது கட்டமாக முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் கோபுரம் அமைக்கும் நடவடிக்கை மற்றும் கனிய மணல் அகழ்வு போன்றவற்றிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தொடர்ச்சியாக மன்னார் பஜார் பகுதியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நேற்று (9) 7ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்திற்கு வலு சேர்க்கும் வகையில் மன்னார் பேசாலை கிராம மக்கள் கலந்து கொண்டு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

மன்னார் தீவு பகுதியில் 2வது கட்டமாக காற்றாலை மின் கோபுரங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பெரும் காற்றாலைகளின் பாகங்கள் வாகனங்களில் மன்னார் நகர பகுதியை நோக்கி எடுத்து ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

நாடாளுமன்ற உறுப்பினரான அத்துரலிய ரத்தன தேரரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள்தீவிரமாகமுன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பழைய வழக்கு ஒன்றில் தான் கைது செய்யப்படலாம் எ;று தெரிந்துகொண்டதும் தேரர் தலைமறைவாகிவிட்டார். அவரைக் கைது செய்வதற்கு கொழும்பில் பொலிஸார் தீவிர தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றனர். ஆனாலும்ஆள்'எஸ்கேப்'இதுவரைபொலிஸார் பல இடங்களிலும் நடத்திய தேடுதல்கள் தோல்வியிலேயே முடிந்துள்ளனவாம்.

அவர்கொழும்புமற்றும்அதைச்சுற்றியுள்ள பகுதிகளில் தங்கியிருப்பதாக அறியப்படும் சுமார் 10 இடங்களில் கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரிகள் சோதனை செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் பல விகாரைகள் மற்றும் வீடுகள் அடங்கும் என்று சிரேஷ்ட காவல்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த இடங்களில் எதற்கும் அவர் சென்றார் என்று எந்த தகவலும் இல்லாததால், அவர் நாட்டை விட்டுத் தப்பிச் செல்வதைத் தடுக்கச் சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

தென்மாகாணத்தில்உள்ளபலவிகாரைகள் மற்றும் பல குடியிருப்பு வளாகங்களில் உள்ள வீடுகளில் அவர் மறைந்திருக்க அதிக வாய்ப்புகளுள்ளதால், கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரிகள் தற்போது அந்த இடங்களையும் கண்காணித்து வருகின்றனர்.

'எங்கள் மக்கள் சக்தி' என்ற கட்சியின் பொதுச்செயலாளர் வேதினிகம விமலதிஸ்ஸ தேரர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக அத்துரலிய ரத்தன தேரர் கைது செய்யப்பட உள்ளார்.

மேலும், 2020 ஆம் ஆண்டில் அக்கட்சி பெற்ற தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அத்துரலிய ரத்தன தேரர் பலவந்தமாகப் பெற்றிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் நிலுவையில் இருந்த இந்த விசாரணை, கொழும்பு குற்றப் பிரிவின் புதிய பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் கண்காணிப்பாளர்இந்திகலொக்குஹெட்டியின் நியமனத்துடன்மீண்டும்தொடங்கப்பட்டுள்ளது.

கொழும்பு குற்றப் பிரிவில் இது போன்ற பல குற்ற விசாரணைகள் நிலுவையில் இருப்பதாகவும் அந்த விசாரணைகள் அனைத்தும் இப்போது தொடங்கப்பட்டுள்ளதாகவும் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு வெளிப்படுத்தியுள்ளது.

சில குற்றங்களில் கொழும்பு குற்றப் புலனாய்வுப்பிரிவின்அதிகாரிகளின்தொடர்பும் வெளிப்படுத்தப்பட்டு வருவதாகவும் பல்வேறு குற்றங்களில் ஈடுபட்ட கொழும்பு குற்றப் புலனாய்வுப்பிரிவின் அதிகாரிகளுக்குக்கடந்த காலங்களில் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி பதவிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com

## படை முகாமிற்குள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இராணுவ முகாமிற்கு சென்ற ஐவரில் ஒருவர்சடலமாகமீட்கப்பட்டதுடன்மற்றுமொரு நபருக்குமுதுகுபகுதிகளில்பலத்தஅடிகாயங்கள் இருக்கும் நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

மேலதிக விசாரணைகளை ஒட்டிசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இராணுவமுகாமிற்குவாருங்கள்தகரங்கள் கழற்றவேண்டும்எனஅழைக்கப்பட்டுஇவர்கள் ஐவர்மீதும்தாக்குதல்மேற்கொள்ளப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. இதில், முத்தையன்கட்டில்வசிக்கும்எதிர்மன்னசிங்கம் கபில்ராஜ் என்ற 32 வயதுடைய இளைஞர் காணாமற்போனார். பின்னர் நேற்று அவர் முத்துஐயன் கட்டுக் குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டார். இவர் ஏழு மாத குழந்தையின் தந்தை.

முத்தையன்கட்டுகுளம் இடதுகரை இராணுவ முகாமிலிருந்து படையினர் வெளியேறி வருகின்றனர். அந்த முகாமைக் கைவிட அவர்கள் ஆயத்தமாகி வருகின்றனர். இந்த நிலையில் முகாமிற்கு வாருங்கள் தகரங்கள் கழற்றவேண்டும் என குறித்த பகுதி இளைஞர் ஒருவருக்கு ஒரு தொலைபேசி இலக்கத்தில் இருந்து வெள்ளிக்கிழமை (07) இரவு 7.30 மணியளவில் இராணுவத்தினரால் அழைப்பு எடுக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது..

இராணுவ முகாம் ஒரு சில நாட்களில் விடுவிக்கப்பட இருப்பதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில் அவ் இராணுவ முகாமிலுள்ள கட்டடங்களை அகற்றும் நடவடிக்கையை இராணுவத்தினர் மேற்கொண்டு வருகிறார்கள். இதனால் தொலைபேசி அழைப்பை நம்பி கிராமத்து இளைஞர்கள் ஐவரும் வெள்ளிக்கிழமை இரவு முகாமிற்குச் சென்றுள்ளனர்.

இராணுவ முகாமிற்குச் சென்ற தம்மைத் தடிகள், கம்பிகளால் இராணுவத்தினர் துரத்தி துரத்தித் தாக்கினர் என்றும் இராணுவ முகாமின் பின்பகுதியில் உள்ள குளம் வரை துரத்திச் சென்றனர் என்றும் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதனால் என்ன செய்வதென்று தெரியாது இராணுவ முகாமின் பின்பகுதி விழியாக ஓடித் தப்பி வந்தனர் எனவும் 20 ற்கு மேற்பட்ட இராணுவத்தினர் தம்மை தாக்கினர் என்றும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில்இராணுவமுகாமிற்குசென்ற ஐந்து நபர்களில் நால்வர் வெள்ளியிரவே வீடுகளுக்குத் திரும்பியிருந்த நிலையில் ஒருவர் காணாமற்போயிருந்தார். நேற்றுக் காலை முத்துஐயன் கட்டுக் குளத்திலிருந்து அவரது சடலமாக மீட்கப்பட்டது.

இதனையடுத்து நேற்று இராணுவ முகாமிற்கு சென்ற இராணுவ வாகனத்தை வீதியில் மறித்துப் பொதுமக்கள் நியாயம் கேட்டதுடன் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

காணாமல்போன குறித்த இளைஞர் தப்பி ஓடும்போது இராணுவ முகாமிற்கு பின்பகுதியில் உள்ள முத்தையன்கட்டு குளத்தின் பின்பகுதியில் வீழ்ந்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் அப்பகுதி கிராம மக்கள் நீரில்இறங்கிநேற்றுவெள்ளிக்கிழமைதேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டபோதும் குறித்த குடும்பஸ்தரின் சடலம் இன்றுகாலை மீட்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த காணாமல்போன இளைஞனின் சகோதரரால் குறித்த சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## மாகாண சபை முறைமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் சிரேஷ்ட நிர்வாக அதிகாரியும் சமூக செயற்பாட்டாளருமான செல்வினும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆட்சியை நிறுவுதலின் முக்கியத்துவம் எனும் தலைப்பில்

வடக்கு மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர்

கலாநிதி கந்தையா சர்வேஸ்வரனும், மாகாணசபை முறைமை ஈழத் தமிழரின் நியாயமான அபிலாஷைகளுக்கான பயணத்தின் முதல் படிக்கல் எனும் தலைப்பில் யாழ் பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்

கோசலையும் கருத்துரைகளை நிகழ்தினார்கள்.

இந்த நிகழ்வில் பல்வேறு தமிழ்க் கட்சிகளின்தலைவர்களும்,முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர்கள் ,பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள்,சிவில்அமைப்புபிரதிநிதிகள் உள்ளுராட்சி மன்ற பிரதிநிதிகள், ஒந்வுநிலை அதிகாரிகள் எனப்பலர் கலந்துகொண்டார்கள்.

## மருத்துவப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறப்பிற்கு நீதி கோரி வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

மருத்துவக் கவனயீனத்தால் ஏற்பட்ட அதீத இரத்தப்போக்கு காரணமாக குறித்த இளம் தாயின் இறப்பு சம்பவித்துள்ளது என மருத்துவப் பரிசோதனை அறிக்கை வெளிவந்தது.

இந்த நிலையில் கடமையில் இருந்த வைத்தியர் ஒருவர், இரண்டு தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் இரண்டு குடும்ப நல உத்தியோகத்தர்கள் என ஐவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்ட நிலையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இந்த நிலையில் குறித்த ஐவரில் தாதிய உத்தியோகத்தர் ஒருவரும், இரண்டு குடும்ப நல உத்தியோகத்தர்களும் மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நிலையில் நேற்று) மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது மன்னார் நீதிவான் குறித்த மூவரையும் ஓகஸ்ட் 12 வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். மேலும் சந்தேகநபரான வைத்தியர் ஒருவரையும் , தாதிய உத்தியோகத்தர் ஒருவரையும் கைது செய்ய உயிரிழந்த மரியராஜ் சிந்துஜா சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மன்றில் விண்ணப்பம் செய்தார். இந்த நிலையில் குறித்த வழக்கு விசாரணை மீண்டும் ஓகஸ்ட் 12 விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

## மாகாண .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து வினவிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்த-தாவது:

பழைய முறைமையிலேனும் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால் அதனை நாம் வரவேற்கின்றோம். மாகாணசபைத் தேர்தல் தொடர்ந்தும் காலம் தாழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றமைதொடர்பில்கடுமையான எதிர்ப்பினை வெளியிடுகின்றோம்.

எமது அரசமைப்பிற்கமைய மாகாண சபைத் தேர்தல்கள் நிச்சயம் நடத்தப்பட வேண்டும். அரசமைப்புத் திருத்தமொன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து இதனை இடைநிறுத்தி வைத்திருக்கின்றனர். எனவே தற்போது அந்த அரசமைப்புத் திருத்தத்தினை மீளப் பெற்றால் ஆளும்தரப்பு கூறுவதைப் போன்று மாகாணசபைத் தேர்தலை பழைய முறைமையில் நடத்த முடியும். புதிதாக எதனையும்செய்யவேண்டியதேவைஇல்லை. இந்த ஆளும்தரப்பினால் குறித்த அரசமைப்பு திருத்தம் முன்வைக்கப்படவில்லை. எனினும் தற்போதைய ஆளும்தரப்பால் அதனை மீளப் பெறுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டால் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதிலும் எந்தத் தடையும் இல்லை.

மாகாணசபைகளை செயற்படுத்த வேண்டியது ஆளும்தரப்பின் பொறுப்பாகும். பொது மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளாலேயே மாகாணசபைகள் நிர்வகிக்கப்படவேண்டும். ஆனால் தற்போது அரசுத்தலைவரின் பிரதிநிதிகளாக ஆளுநர்கள் மாகாண சபைகளை ஆட்சி செய்கின்றனர். அது தவறாகும்.

அவசர நிலைமைகளின்போது, தவிர்க்க முடியாத சூழ்நிலைகளின்போது இவ்வாறான நிர்வாகம்இடம்பெறலாம். ஆனால்அதற்காகபல ஆண்டுகளாக இவ்வாறு மாகாணசபைகளில் ஆளுநர் ஆட்சி இடம்பெறுவதற்கு இடமளிக்க முடியாது.

பழையமுறைமையின்கீழ்மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு ஆளும்தரப்பு தீர்மானித்தால் ஐக்கிய மக்கள் சக்தி அதற்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்கும். எனவே முடிந்தளவு விரைவாக தேர்தலை நடத்தி மக்கள் ஆட்சிக்கு இடமளிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம் என்றார்.

## மன்னார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரப்பட்ட நிலையில் மன்னார் தள்ளாடி சந்தியில் ஞாயிற்றுக்கிழமை மாலை மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இந்த நிலையில் தள்ளாடி சந்தி மற்றும் மன்னார் சுற்றுவட்ட பகுதியில் தொடர்ச்சியாக மக்களும்,பொது அமைப்புக்கள் இணைந்து சுழற்சிமுறையில்போராட்டத்தைமுன்னெடுத்து வருகின்ற நிலையில்,மக்களின் எதிர்ப்பையும் மீறி காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பதற்கான பாகங்கள் மன்னார் நகர பகுதிக்கு பலத்த பொலிஸாரின் பாதுகாப்புடன் எடுத்து வரப்பட்டது.

எனினும் தொடர்ச்சியாக போராட்டங்கள் இடம் பெற்று வந்தது.இந்த நிலையில் குறித்த போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் மன்னார் பேசாலை கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் பேருந்துகள் மூலம் இன்றைய தினம் சனிக்கிழமை (09) வருகை தந்து குறித்த போராட்டத்திற்கு வலு சேர்க்கும் வகையில் கலந்து கொண்டு தமது ஆதரவை வழங்கினர்.

குறிப்பாக மன்னார் தீவு பகுதியில் ஏற்கனபேவ அமைக்கப்பட்ட காற்றாலை மின் கோபுரங்களினால் மீனவர்கள் பாரிய அளவில் பாரிய அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதோடு,காற்றாலைகள் காணப்படும் பகுதிகளில் வசித்து வருகின்ற மக்கள்,குறிப்பாக வயோதிபர்கள், சிறுவர்கள்,கர்ப்பிணித்தாய்மார்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுட்டிக்காட்டினர்.

மேலும் காற்றாலை கோபுரங்கள் அமைத்ததன் காரணமாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளினால் அண்மையில் ஏற்பட்ட மழை காரணமாக பேசாலை கிராமம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பாரிய வெள்ள நீர் தேங்கிய நிலையில் அவற்றை கடலுக்குள் செலுத்த தாம் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்ததாகவும் அந்த மக்கள் தெரிவித்தனர்.

மேலும் மன்னார் தீவு பகுதியில் முன்னெடுக்கநடவடிக்கைமேற்கொள்ளப்பட்டு வரும்கணியமணல்அகழ்வுக்குநாங்கள்ஒரு போதும் அனுமதி வழங்க மாட்டோம் எனவும் மன்னார் தீவை அழிவு பாதைக்கு கொண்டு செல்லும் குறித்த இரு திட்டங்களையும் நிறுத்த அரசுத் தலைவர் துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மன்னார் நகர சுற்று வட்டத்தில் இருந்து பதாகைகளை ஏந்தியவாறு மாவட்டச் செயலக பிரதான வீதியூடாக சென்று மீண்டும் நகர சுற்று வட்ட பகுதியை சென்றடைந்தனர்.

## பலஸ்தீன ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் பெஞ்சமின்னின் திட்டத்துக்கு இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இஸ்ரேலிய பிரதமர் அலுவலகம் அறிக்கையொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் தனது எக்ஸ் தளத்தில் செய்துள்ள பதிவிலேயே எதிர்க்கட்சி தலைவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீனத்திற்கும் இஸ்ரேலுக்கும் இடையில் யாருடைய வரலாறு அதிக பலம் கொண்டது என்பது பற்றிய விவாதத்துக்கு அப்பால், இது ஒரு மனித பேரழிவாக மாறிவிட்டது.

இந்தப் பேரழிவைத் தடுப்பதற்கு அகிம்சை மட்டுமே ஒரே வழி, வேறு வழியில்லை. பிரதேசம் அல்லது வளங்களை வெல்வதை விட, நமது மனிதநேயத்தை இழப்பது குறித்து நாம் மிகவும் கவலைப்பட வேண்டும். நாம் அதை இழந்தால், எல்லாவற்றையும் இழந்துவிட்டோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## இனப்படுகொலை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள்என்றஅடிப்படையில்தான்அங்கு இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். அங்குகொலைநடந்தால்கூடஇராணுவத்திற்கு தெரியாமல் நடக்க முடியாத நிலைதான் காணப்படுகின்றது. அதுதான் அங்கு காணப்படுகின்ற யதார்த்தம், ஆகவே இந்த நிலையிலே,ஒரு இனப்படுகொலையையே செய்திருக்கின்ற ஒரு இராணுவம் 16 வருடங்களாக அந்த இனப்படுகொலை தொடர்பாக எந்த வித பொறுப்புக்கூறலும் நடக்காமலிருக்க,அந்த இனப்படுகொலையில் ஈடுபட்ட நபர்களே பக்கத்துபக்கத்து வீடுகளில் முகாம்களில் தங்கியுள்ளனர்.

பெண்களை துஸ்பிரயோகம் செய்தவர்களே பக்கம் பக்கமாக வீதியில் நடந்து செல்கின்றார்கள். பிள்ளைகளை கடத்தி துஸ்பிரயோகம் செய்தவர்களே பக்கத்தில் வந்து நிற்கின்றார்கள். அவர்கள் பாடசாலைக்கு செல்கின்றார்கள், சிவில் பாதுகாப்பு படையினர் என தெரிவித்துவிட்டு முன்பள்ளிகளில் படிப்பிக்கின்றாஜுகள்.

இவ்வாறு பெரும் குற்றங்களைப் புரிந்தவர்கள் தண்டிக்கப்படாமல் தொடர்ந்தும் மக்கள்மத்தியில்இருப்பதுஅவர்களைஇன்னும் மிக மோசமான ஒரு மனஉழைச்சலிற்கு ஆளாக்கியுள்ளது. அவர்களின்மனதைமேலும் உடைக்கின்ற ஒரு செயலாகத்தான் இந்தக் கொலையையும் நாங்கள் பார்க்கின்றோம்.

தொடர்ச்சி 6ம் பக்கம்....

# மருத்துவ நிபுணர்கள் போராட்டத்தை தடுக்க தீவிர முயற்சி எடுக்கப்படுகிறது

## சுகாதாரத்துறை அமைச்சர் தெரிவிப்பு

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நாளை திங்கட்கிழமை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ள வேலை நிறுத்தப் போராட்டத்தினை தடுப்பதற்கு சுகாதார அமைச்சின் சார்பில் சகல முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன. இனங்காணப்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு படிப்படியாக தீர்வு வழங்கப்படும். எனவே பொது மக்களுக்கு தடையற்ற மருத்துவ சேவையை வழங்குவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற இலங்கை அவசர மருத்துவ நிபுணர்கள் கல்லூரியின் வருடாந்த ஆய்வு மாநாட்டில் பங்கேற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கு வேலை நிறுத்த போராட்டத்துக்குச்செல்வதற்கானகாரணமொன்றுஇருக்கும்எனநான் நினைக்கவில்லை. அவர்களுடன் நான் கலந்துரையாடினேன். சில இடங்களிலுள்ள பிரச்சினைகள் இனங்காணப்பட்டுள்ளன. தற்போது சேவையாற்றும் வைத்தியர்கள் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்களுடன் இணைக்கப்பாட்டுடனேயே பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். அதற்கு நாம் நியாயமான தீர்வொன்றை வழங்குவோம்.

மக்களுக்கு சிறந்த சேவை வழங்க வேண்டும் என்பதே அனைவரதும் நோக்கமாகும். எவ்வாறிருப்பினும் கடும் நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே நாம் அந்த சேவையை ஆற்றிக் கொண்டிருக்கின்றோம். கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்ட நெருக்கடிகளுக்கு தற்போது படிப்படியாக தீர்வினை வழங்கிக் கொண்டிருக்கின்றோம். எனவே அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடாது என எதிர்பார்க்கின்றோம்.

கடந்த ஆட்சிக் காலங்களில் செயற்பட்டதைப் போன்றே தற்போதும் சில அதிகாரிகள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு நியாயமானதல்ல. சுகாதார அமைச்சின் அனைத்து அதிகாரிகளும் ஒரே இலக்குடனேயே பணியாற்றுகின்றனர். சுகாதாரத்துறையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு என்ன காரணம் என்பதை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நன்கு அறியும்.

தட்டுப்பாடு நிலவும் மருந்துகளை விரைவாக கொள்வனவு செய்வதற்கானநடவடிக்கைகள்முன்னெடுக்கப்பட்டுள்ளன.திங்களன்று முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படும் வேலை நிறுத்த போராட்டத்தினை தடுப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் சுகாதார அமைச்சின் சார்பில் நாம் முன்னெடுத்திருக்கின்றோம். எமது முயற்சி வெற்றியளிக்கும் என்று நம்புகின்றோம் என்றார்.

# மாணவர்களை இயந்திரமயப்படுத்துவதாக புதிய கல்விச் சீர்திருத்தம் இருக்க முடியாது

## ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் கருத்து

கல்வி சீர்திருத்தத்தினை நிகழ்காலத்துக்கு தேவையான வகையில் முன்னெடுப்பதில் தவறில்லை. ஆனால் அந்த சீர்திருத்தங்கள் எவ்வாறு இடம்பெற வேண்டும் என்பது தொடர்பில் நாம் அவதானம் செலுத்த வேண்டும். எதிர்கால சந்ததியினரை இயந்திரமயப்படுத்தும் வகையிலான கல்வி சீர்திருத்தங்கள் சிறந்தவையல்ல என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கண்டியில் வெள்ளிக்கிழமை (08) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கல்வி சீர்திருத்தத்தினை நிகழ்காலத்துக்கு தேவையான வகையில் முன்னெடுப்பதில் தவறில்லை. ஆனால் அந்த சீர்திருத்தங்கள் எவ்வாறு இடம்பெற வேண்டும் என்பது தொடர்பில் நாம் அவதானம் செலுத்த வேண்டும்.

கல்வி சீர்திருத்தம் என்ற பெயரில் நாட்டில் மாணவர்களின் மனநிலையை மாற்றுவதற்கான முயற்சிகள் இடம்பெறுவதாகவே தற்போது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

கல்வி சீர்திருத்தங்கள் தொடர்பில் ஆளும்தரப்பு யாருடன் கலந்தாலோசித்திருக்கிறது? இதற்காக ஆளும்தரப்பு முன்வைக்கும் ஆதாரம் என்ன? கல்வி சீர்திருத்தத்துக்கான அறிக்கையை ஆளும்தரப்பு தயாரித்திருக்கிறது என்றால் அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியிருக்கின்றார். இதற்கு ஆளும்தரப்பின் பதில் என்ன?

ஆளும்தரப்பு இது தொடர்பில் எந்தவொரு ஆவணத்தையும் தயாரிக்கவில்லை. கலந்துரையாடலுக்கான பேசு பொருளாக மாத்திரமே இது காணப்படுகிறது.

அவ்வாறெனில் இது முழுமையாக மக்களை ஏமாற்றுவதற்காக முன்வைக்கப்படும் யோசனையாகும். இவ்வாண்டுக்குள் இந்த சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய ஸ்திரமாகக் கூறுகின்றார்.

அடுத்த ஆண்டு ஆரம்பமாகும் போது சில வகுப்புக்களுக்கான பாடப்பரப்புக்களில் மாற்றங்கள் ஏற்படும் என அவர் கூறுகின்றனர். அவ்வாறெனில் இந்த மாற்றம் தொடர்பில் எவ்வாறு தீர்மானங்கள் எடுக்கப்பட போகின்றன?

இந்த விடயம் தொடர்பில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போது எவ்வாறு அவை நடைமுறைப்படுத்தப்படும்? கலந்துரையாடல்களில் இறுதி தீர்மானம் எடுக்கப்படாத நிலையில், அவற்றை நடைமுறைப்படுத்த முற்படுவது சிறந்த தீர்மானமல்ல.

வரலாறு மற்றும் அழகியல் பாடங்களை கட்டாய பாடங்கள் என்று இல்லாமல், விருப்பத்தெரிவில் உள்ளடக்கி வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கான தீர்மானத்தை ஆளும்தரப்பு எடுத்துள்ளது. மதத் தலைவர்கள் இதற்கு கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டிருக்கின்றனர்.

இவற்றுக்கு அப்பால் ஆளும்தரப்பு இந்த தீர்மானத்தை நிறைவேற்ற தீர்மானிக்குமாயின் அது சில அரச சார்பற்ற நிறுவனங்களின் தேவைக்காகவேயாகும் என்றார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உண்மை வெளிப்படவேண்டும்

முல்லைத்தீவு மாவட்டம், முத்துஐயன் கட்டுக் குளக்கரைப் பகுதியில் நடந்த சமீபத்திய சம்பவம், வடக்கின் மக்களிடையே அதிர்ச்சி, அச்சம் மற்றும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. ஊடகங்களில் வெளியாகியுள்ள தகவல்களின்படி, அந்தப் பகுதியில் உள்ள படை முகாமிற்குள் சென்ற ஐந்து பேர் தாக்கப்பட்டு, அவர்களில் ஒருவரின் உயிர் காவு போயுள்ளது. அவர் பின்னர் குளத்தில் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தச் சம்பவம், போரின் பிந்தைய காலத்தில் பொதுமக்கள் மற்றும் பாதுகாப்பு அமைப்புகள் இடையே உருவாக வேண்டியிருந்த நம்பிக்கைக் பாலத்தில் பெரிய பிளவை ஏற்படுத்துகிறது.

முதலாவது, இத்தகைய சம்பவங்கள் நடப்பது, அமைதி நிலவுகிறது என்ற அரசின் வாதத்திற்கு எதிரான கடுமையான சாட்சியாகும். பத்து ஆண்டுகளுக்கும்மேலாக போரின் புகை அடங்கியிருந்தாலும், பொதுமக்கள் தங்கள் சொந்த கிராமங்களில், தங்கள் சொந்த நிலங்களில் பாதுகாப்பாகச் செல்ல முடியாத நிலை தொடர்கிறது என்றால், அது நல்லிணக்கத்தின் தோல்வியை மட்டுமே காட்டுகிறது. ஒரு படை முகாமிற்குள் பொதுமக்கள் ஏன் சென்றார்கள்? அவர்கள் அங்கு எவ்வாறு நடத்தப்பட்டார்கள்? எதற்காக தாக்கப்பட்டார்கள் என்பன அனைத்தும் தெளிவுபடுத்தப்பட வேண்டிய முக்கியக் கேள்விகளாகும்.

இரண்டாவது, ஒரு உயிரிழப்பு நிகழ்ந்திருப்பது இந்தச் சம்பவத்தை ஒரு சாதாரண மோதல் நிகழ்வாக அல்லாமல், கடுமையான குற்றமாக ஆக்குகிறது. ஒருவரின் உயிர் காவு போவதற்கான சூழ்நிலை எவ்வாறு ஏற்பட்டது? அவர் தண்ணீரில் விழுந்தாரா, தள்ளப்பட்டாரா, அல்லது தாக்குதலின் விளைவாக உயிரிழந்தாரா? இத்தகைய கேள்விகளுக்கு அரசு உடனடி, வெளிப்படையான, மற்றும் சுயாதீனமான விசாரணையின் மூலம் பதில் அளிக்கவேண்டும். இல்லையெனில், மக்கள் மனங்களில் ஆளும்தரப்பு மீதான சந்தேகமும் நம்பிக்கையின்மையும் மேலும் ஆழப்படும்.

மூன்றாவது, இதுபோன்ற சம்பவங்கள் தனித்தனியாக நடப்பவை அல்ல. வடக்கு மற்றும் கிழக்கில், போருக்குப் பிறகு பல முறை, படை முகாம்கள் அல்லது பாதுகாப்பு படையினருடன் தொடர்புடையதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. பல நேரங்களில், இவை விசாரணையின் பெயரில் காலம் தாழ்த்தப்பட்டு, உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் தப்பியுள்ளனர். இதனால், சட்டத்தின் ஆட்சி, நீதி, சமத்துவம் போன்ற ஜனநாயகக் கொள்கைகள் வெறும் வார்த்தைகளாகவே மக்கள் மனதில் பதிந்துவிட்டன.

நான்காவது, அரசு இந்தச் சம்பவத்தை அரசியல் நோக்கில் அல்ல, மனிதாபிமான மற்றும் சட்டநீதிக் கோணத்தில் பார்க்கவேண்டும். ஒரு குடிமகனின் உயிர் காவு போகும்போது, அவர் எந்த இனத்தைச் சேர்ந்தவர், எந்தப் பகுதியில் வசிப்பவர், எந்த மொழி பேசுபவர் என்பவை பொருட்டல்ல. அரசின் முதன்மைப் பொறுப்பு, குடிமகனின் உயிர் மற்றும் பாதுகாப்பைக் காக்கும் கடமையாகும். அந்தக் கடமையில் குறைபாடு ஏற்பட்டால், அதற்கான பொறுப்பை ஏற்கவும், திருத்த நடவடிக்கை எடுக்கவும் அரசே முன் வர வேண்டும்.

ஐந்தாவது, பாதிக்கப்பட்ட குடும்பங்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு நீதியும் இழப்பீடும் வழங்கப்படவேண்டும். தாக்குதலில் காயமடைந்தவர்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சை மற்றும் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும். இதுவே ஒரு மனிதாபிமானமான அரசின் அடையாளமாகும்.

ஆறாவது, சம்பவம் தொடர்பாக பொதுமக்களின் அச்சத்தையும் அதிருப்தியையும் குறைக்கும் வகையில், அரசு வெளிப்படையான தகவல் பரிமாற்றத்தை மேற்கொள்ளவேண்டும். 'விசாரணை நடைபெறுகிறது' என்ற ஒரே வரி விளக்கத்தில் நின்றுவிடாமல், விசாரணையின் முன்னேற்றம் குறித்து மக்கள் அறிய உரிமை பெற்றுள்ளனர்.

இதுபோன்ற சம்பவங்களைத் தடுக்க, அரசு சில உறுதியான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும்:

படைக் குறைப்பு – வடக்கு கிழக்கு மாகாணத்தில் அளவுக்கதிகமாக இருக்கும் படையினரைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். 1980களுக்கு முன்னர் இருந்த நிலைகளுக்குப் படையினர் திரும்பவேண்டும் என்பது முன்னாள் தலைவர் சம்பந்தன் இறக்கும் வரையில் வலியுறுத்தி வந்த கோரிக்கையாக இருந்தது.

சுயாதீன விசாரணைக் குழு அமைத்தல் – இதில் நீதித்துறை, மனித உரிமை ஆணையம், மற்றும் குடிமக்கள் பிரதிநிதிகள் இடம்பெற வேண்டும்.

படை முகாம்களின் பொறுப்புணர்வு – முகாம்கள் சுற்றியுள்ள பகுதிகளில் பொதுமக்கள் பாதுகாப்பு நடைமுறைகளை உறுதி செய்தல்.

குற்றவாளிகளுக்குத் தண்டனை – பதவி, அதிகாரம், என்பவற்றைப் பொருட்படுத்தாமல், குற்றவாளிகள் மீது சட்டத்தின் முழுத் தீவிரத்துடன் நடவடிக்கை எடுப்பது.

மக்கள்–படை நம்பிக்கை வளர்த்தல் – இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்க, திறந்த உரையாடல் மற்றும் நம்பிக்கையைக் கட்டமைப்பு முயற்சிகளை மேற்கொள்வது.

முத்துஐயன் கட்டுக் குளக்கரை சம்பவம், வெறும் ஒரு கிராமத்தின் துயரமாக அல்லாது, முழு நாட்டின் சட்டநீதி அமைப்புக்கு முன் நிற்கும் ஒரு சோதனைக்கல்லாகும். அரசு, இந்தச் சம்பவத்தை மூடி மறைக்கும் பழைய வழக்கில் செல்லாமல், உண்மையை வெளிப்படுத்தி, குற்றவாளிகளை தண்டித்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கும் புதிய வழியைக் காட்ட வேண்டும்.

நீதி கிடைக்காதபோது, நம்பிக்கை சிதைந்து விடும். நம்பிக்கை சிதைந்தபோது, அமைதி நிலைக்காது. அமைதி நிலைக்காதபோது, எந்த முன்னேற்றப் பாதையும் நிலையானதல்ல. அதனால், இந்தச் சம்பவம் குறித்து அரசு இன்று எடுக்கும் தீர்மானம், நாளைய நல்லிணக்கத்தின் திசையை நிர்ணயிக்கும்.

# அவசர மருத்துவ சேவைகளை மருத்துமனைகளோடு மட்டும் மட்டுப்படுத்திவிட முடியாது

## சுகாதார அமைச்சர் கருத்து

'அவசர மருத்துவ சேவைகளை மருத்துவமனைகளோடு மட்டும் மட்டுப்படுத்த முடியாது. அதன் தேவையுடைய அனைத்து இடங்களிலும் இது நிறுவப்பட வேண்டும், மேலும் முழு மக்களையும் மனதில் கொண்டு இந்தச் சேவைகள் செயல்பட வேண்டும்' என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இலங்கை அவசரகால மருத்துவர்கள் கல்லூரியின் (SLCEP) வருடாந்திர மாநாடு - 2025 சனிக்கிழமை (09) கொழும்பில் உள்ள கலதாரி ஹோட்டலில் நடைபெற்றது. அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.. அவர் மேலும் தெரிவித்ததாவது:

வீட்டிலிருந்து மருத்துவமனைக்கு ஒரு வலுவான அவசர சிகிச்சை முறையை உருவாக்குவதே ஆளும்தரப்பின் முதன்மை நோக்கம். இது அனைவருக்கும் எளிதில் அணுகக்கூடியதாக இருக்கவேண்டும். இந்த இலக்கை அடைய அரசாங்கம் பல தீர்க்கமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அவசர சிகிச்சை சேவைகள், மருத்துவமனைகளில் குறிப்பிட்ட பராமரிப்புக்கு தடையின்றி தொடர வேண்டும்.

இந்த ஆண்டு மாநாட்டின் கருப்பொருள் 'இலங்கை முழுவதும் அவசர மருத்துவத்தின் எதிர்காலத்தை இணைத்தல்' என்பதாகும். இது ஒரு பொருத்தமான கருப்பொருள்.

அவசர மருத்துவத்தில் சமீபத்திய முன்னேற்றங்கள், கல்விப் பரிமாற்றங்கள் மற்றும் மருத்துவப் புரிதல்களை மேம்படுத்துவதற்காக சர்வதேச மற்றும் உள்ளூர் நிபுணர்கள் குழுவை ஒன்றிணைத்து இந்த மாநாட்டை ஏற்பாடு செய்த இலங்கை அவசர மருத்துவக் கல்லூரிக்கு (SLCEP) எனது வாழ்த்துகள். இந்த மாநாட்டில் கலந்துகொண்டது எனக்குக் கிடைத்த கௌரவம்.

உலகளவில் திறமையானதும், சமமானதுமான, மீள்தன்மை கொண்ட சுகாதார அமைப்பை நோக்கிய நமது பயணத்தில் அவசர சிகிச்சை சேவைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை பெரும்பாலும் முதல் தொடர்பு புள்ளியாகவும், பல சந்தர்ப்பங்களில் கடைசி பாதுகாப்பு வளமாகவும் திகழ்கின்றன.

எங்கள் திட்டம், சிறிய மருத்துவமனைகள்கூட சரியான நேரத்தில் அவசர சிகிச்சையைப் பெறுவதை உறுதி செய்கிறது.

ஒவ்வொரு குடிமகனும், அவர் எந்த இடத்தில் இருந்தாலும், அடிப்படை சிகிச்சையை அணுக முடியும். அவசர சிகிச்சை அமைப்பின் அனைத்து மட்டங்களிலும் திட்டமிடல், ஒழுங்குமுறை, பயிற்சி மற்றும் சேவை வழங்கலில் தலைமைத்துவம், ஒருங்கிணைப்பு, மற்றும் தொடர்ச்சியை வழங்குவதற்காக சுகாதார அமைச்சு, இலங்கை அவசர மருத்துவர்கள் கல்லூரியுடன் இணைந்து செயல்படுகிறது.

நாட்டின் சுகாதார சேவையில் அவசர மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் துணை மருத்துவர்கள் உள்ளிட்ட மருத்துவ நிபுணர்களின் அர்ப்பணிப்பு இல்லாமல் இந்த இலக்குகள் சாத்தியமில்லை. இந்த நிபுணர்கள் சுகாதார அமைப்பின் முதுகெலும்பு ஆவர். அதிக ஆபத்து நிறைந்த சூழலில், மகத்தான அழுத்தத்தின் கீழ் அவர்களின் அயராத சேவை பாராட்டுக்குரியது.

மருத்துவர்கள் மட்டுமல்ல, செவிலியர்களையும் உள்ளடக்கிய பல்துறை அவசர சிகிச்சை குழுக்களை உருவாக்குவதற்கான இலங்கை அவசர மருத்துவக் கல்லூரியின் அர்ப்பணிப்பையும் நான் பாராட்டுகிறேன். இந்த மாநாடு வெறும் அறிவியல் கூட்டத்தை விட உயர்வானது. இது அவசர சிகிச்சையின் எதிர்காலத்தை வடிவமைக்கும் ஒரு இடம் - புதுமைகளைப் பகிர்ந்துகொள்ளவும், கூட்டாண்மைகளை உருவாக்கவும், அனைவரும் நம்பக்கூடிய அமைப்புகளை வலுப்படுத்தவும் இது ஒரு சிறந்த தளம்' என்றார்.

இந்த மாநாட்டில், அவசரகால மருத்துவ நிபுணர்கள் உட்பட மருத்துவர்கள், அவசர சிகிச்சை மற்றும் நோய் நிலைமைகள் குறித்த தகவல்களைப் பெற உதவும் 'அவசரகால வாழ்க்கை ஆதரவு' மென்பொருளின் (App) வெளியீடும் இடம்பெற்றது.

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர் டாக்டர் அனில் ஜாசிங்க, தெற்காசிய அவசர மருத்துவ சங்கத்தின் தலைவர் டாக்டர் தாஜ் ஹசன், இலங்கை அவசர மருத்துவக் கல்லூரியின் தலைவர் டாக்டர் இனுகா விஜேகுணவர்தன உள்ளிட்ட பல முன்னணி மருத்துவ நிபுணர்கள் மற்றும் விருந்தினர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A - 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B - 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C - 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு 2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study MBBS in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION OPEN
CONTACT US FOR ADMISSION
0701348384

## இனப்படுகொலை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினரை அவர் இழைத்த குற்றங்களுக்காக முழுமையாகப் பொறுப்புக் கூறவைக்கின்ற வரைக்கும்,இராணுவத்தில் இனப்படுகொலை, மனித குலத்திற்கு எதிரான குற்றம், போர்க்குற்றங்கள் போன்றவற்றில் ஈடுபட்ட முழுப்பேரும் அதிலிருந்து முழுமையாக அகற்றப்படும் வரையிலாவது அந்த இராணுவம் வடக்கு கிழக்கிலிருந்து அகற்றப்படவேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள்முன்வைப்பதற்குகாரணம்எங்களிற்கு ஏதோ விசர் என்பதற்காக இல்லை. அவர்கள் அங்கிருக்கக்கூடாது , அந்த மக்களிற்கு அவர்கள் அங்கிருப்பதே ஒரு ஆபத்து.

இராணுவம் தொடர்ந்தும் அதே இனப்படுகொலை வெறியில் இருக்கின்ற வரைக்கும், முல்லைத்தீவில் - வடக்குகிழக்கில் இருக்கின்ற எந்தவொரு தமிழ் மக்களிற்கும் பாதுகாப்பு இருக்கப்போவதில்லை- என்றார்.

## ரணிலின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று காவல்துறை கூறுகிறது.

துசித ஹல்லொலுவ அடிக்கடி செல்லும் பல இடங்களுக்குக் கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரிகள் சென்றபோதும், அவர் அந்த இடங்களுக்கும் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச்சூடு நடத்தியவர், உந்துருளி சாரதி மற்றும் இருவரையும் வழிநடத்திய பல சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கொழும்பு குற்றப்பிரிவு கூறுகிறது.

தொழில்நுட்ப விசாரணைகள் உள்ளிட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்த தகவல்களின் அடிப்படையில் துசித ஹல்லொலுவவைகைதுசெய்யப்புலனாய்வுப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:

kalaikkathirnews@gmail.com

# உலக ஆதிவாசிகள் தேசிய தின கொண்டாட்டத்தில் அநுரகுமார

உலக ஆதிவாசிகள் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய வைபவம் அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தலைமையில் நேற்று முற்பகல்தம்பானஆதிவாசி அருங்காட்சியக வளாகத்தில் நடைபெற்றது.

இலங்கையின் பிரதான ஆதிவாசியினத் தலைவரான, விஷ்வகீர்த்தி வனஸ்பதி ஊருவரிகே வன்னியலெத்தோ, 1996 ஆம் ஆண்டு ஜெனீவாவில்நடந்தஆதிவாசிகள்மாநாட்டில்கலந்துகொண்டபோது, உலக ஆதிவாசிகள் தின வைபவத்தை இலங்கையில்கொண்டாடுவது குறித்த கருத்தாடல் ஆரம்பமாகியதுடன், அதன்படி, இலங்கையின் முதல் தேசிய ஆதிவாசிகள் தின கொண்டாட்டம் 1999 ஆம் ஆண்டு கொழும்பு விஹார மகா தேவி பூங்காவில் நடைபெற்றது.

இந்த முறையும், பல்வேறு அரச மற்றும் தனியார்நிறுவனங்கள்இணைந்துதேசியஆதிவாசிகள்தினகொண்டாட்டத்தைசிறப்பானமுறையில் ஏற்பாடு செய்திருந்ததுடன், அமைதி மற்றும் சுபீட்சத்திற்காக ஆசீர்வதிக்கப்பட்ட பாரம்பரிய ‘கிரி கொரஹா‘ சம்பிரதாயம் உட்பட ஆதிவாசிகளின் தனித்துவமானபல்வேறுகலாசாரஅம்சங்களுடன் இந்த நிகழ்வு வண்ணமயமாக இருந்தது.

அரசுத் தலைவர் அநுர குமார திசாநாயக்க, முன்னாள் ஆதிவாசிகள் தலைவர் ஊருவரிகே திஸாஹாமியின் உருவச்சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்தியதோடு இந்த வைபவம் தொடங்கியதுடன்,அருங்காட்சியக வளாகத்தில் அரசுத் தலைவர், வெள்ளை சந்தன செடியையும் நட்டார்.

இலங்கையின் பிரதான ஆதிவாசியினத் தலைவரான, விஷ்வகீர்த்தி ஸ்ரீ வனஸ்பதி ஊருவரிகேவன்னியலெத்தோ, ஆதிவாசியினரின் பிரச்சினைகள் அடங்கிய ஒரு மகஜர் ஒன்றை அரசுத்தலைவர்யிடம்கையளித்ததுடன்,நினைவுப் பரிசொன்றையும் வழங்கிவைத்தார். அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவினால் ஆதிவாசியின தலைவருக்கு அன்பளிப்பும் வழங்கி வைக்கப்பட்டது.

ஆதிவாசியின சமூகத்தினரின் உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்தல் மற்றும் விற்பனை செய்வதற்காக விற்பனை கூடங்கள் நிர்மாணிக்க ஆரம்பித்தல் மற்றும் பாரம்பரிய அறிவு மற்றும் தேசியவளங்களைப்பயன்படுத்திதயாரிக்கப்படும் இலங்கையில் முதல் ஆதிவாசி மூலிகை சவர்க்காரம் ‘கைரி‘ அறிமுகப்படுத்தப்பட்டதுடன், ஆயுர்வேத சவர்க்காரத் தயாரிப்பு பயிற்சியை நிறைவு செய்த ஆதிவாசியின பெண்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி உள்ளிட்ட அமைச்சர்கள், அரச அதிகாரிகள், இலங்கைமற்றும்மாலைதீவுகளுக்கானகனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வொல்ஷ் உட்பட கனேடிய உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள் மற்றும் அதிதிகள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# அதிர்ச்சி வைத்தியம்

## என். சத்திய மூர்த்தி

செம்மணி புதை குழி விவகாரம், இப்போது தோண்ட தோண்ட அடுத்தடுத்து எலும்பு கூடுகளை மட்டும் வெளியில் கொண்டு வரவில்லை. அதற்கும் அப்பால் சென்று, இவை அனைத்தும் தொடங்குவதற்கு காரணமாயிருந்த கிருஷாந்தி படுகொலை வழக்கில் தண்டனை அனுபவிக்கும் முன்னாள் படைவீரர் சோமவன்ச ராஜபக்ச, தான் அனைத்து உண்மைகளையும் வெளியிடத் தயாராய் இருக்கிறார் என்று அறிவித்துள்ளது வரை தொடர்ந்துள்ளது.

இதன் அடுத்த கட்ட நடவடிக்கைதான் என்ன? வழக்கம் போலவே, தமிழர் தரப்பு சர்வதேச குற்றவியல் நீதி விசாரணை, ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பின் தொடர் விசாரணையின் தொடர்ச்சி என்றெல்லாம் பேச தொடங்கிவிட்டது. எது எப்படியோ, இந்தக் காரணங்களினாலும், கஜேந்திரகுமார் தலைமையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு, தமிழர் தரப்பில் இருந்து அனுப்பி இருக்கும் மனு குறித்த பிரச்சினை மேலும் நீர்த்துப் போய்விட்டது.

இத்தனைக்கும் செம்மணி விவகாரத்தையும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமைத்துள்ள குழுவின் விசாரணைக்கு உட்படுத்தவேண்டும் என்பதுதான், அந்த மனுவின் தாக்கம். ஆனால், வழக்கம் போலவே தமிழர் தரப்பின் உள்குத்துகளில் அந்த மனு காணாமலே போய்விட்டது.

அதிலும் குறிப்பாக, முந்திரி கொட்டை போல் கஜேந்திரகுமார் இந்தப் பிரச்சினையைத் தமிழ் அரசுக் கட்சித் தலைமையைக் கலக்காமல் முன்னெடுத்தது, அதற்கு பின்னால் இருந்த அரசியல் நோக்கத்தை படம்போட்டுக் காட்டிவிட்டது. என்ன, தமிழ் அரசியல் முக்கோணத்தில், கஜேந்திரகுமார், சுமந்திரன் மற்றும் சிறீதரன் ஆகியோரது ஈகோ விளையாட்டுகளில் இனப்பிரச்சினை மேலும் மேலும் அடி வாங்கிக் கொண்டிருக்கிறது.

இந்த பின்னணியில், செம்மணியில் புதைக்கப்பட்டவர்களுக்கானநீதிகுறித்துபுலம்பெயர்ந்தோரும் பேசத் தொடங்கினால், அது மேலும் ஒரு குழாயடிச் சண்டையாகவே மாறிவிடும். அவர்களுக்குத் தூபம் போடவும், அவர்களுக்கே படம் காட்டவும், இங்கும் சரி, புலம்பெயர்ந்தோர் மத்தியிலும் சரி, இருக்கவே இருக்கிறது, புல்லுரிவி போலிருக்கும் சமூக ஊடகங்கள்.

### வெத்து வேட்டு

தற்போதைய தமிழர் கோரிக்கையால் மட்டும் செம்மணி குறித்து சர்வதேச குற்றவியல் விசாரணையோ அல்லது சர்வதேச அங்கீகாரம் பெற்ற புலன் விசாரணையோ முன்னெடுக்கப்படுமா? கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலான நிகழ்வுகளை வைத்து நோக்கும்போது, அது இன்னமும் ஒரு பம்மாத்து வேலைதான் என்பது புலப்படும்.

எப்போது இந்த நாட்டின் அரசு சர்வதேசம் சார்ந்த எந்தவொரு விசாரணையையும் ஏற்றுக் கொள்ளவில்லையோ, அப்போதே அது இல்லாத ஊருக்கு வழி சொல்லும் கதையில் இன்னொரு அத்தியாயம்தான். போர்க் குற்றங்கள் விடயத்தில், அடுத்தடுத்து பதவியேற்ற அரசுகளின் நிலைபாடு இதுதான்.

அதேசமயம் எந்தவொரு சர்வதேச விசாரணையும் இல்லாமல், அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற மேலை நாடுகள் சில முன்னாள் இராணுவத் தளபதிகளை தங்கள் நாடுகளுக்குள் அனுமதிக்க மாட்டோம் என்று அவ்வப்போது அறிவித்து வந்துள்ளார்கள். இது மட்டும்தான் அவர்களால் செய்யமுடியும்.

ஒரு கட்டத்திற்கு மேல், தளபதிகளுக்கு அடுத்தடுத்த நிலைகளில் பணி புரிந்த கடைசிப் படைவீரர் வரை யாருமே மேலை நாடுகளுக்கு செல்லப்போவதில்லை என்றால், அவர்களின் இந்த அனுமதி மறுப்பும்கூட வெறும் வெத்து வேட்டுதான். இதுவும் இங்குள்ள தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் புலம்பெயர்ந்தோர் தலைமைகளுக்கும் தெரியாத விடயமல்ல.

### வாடிக்கை, பொழுதுபோக்கு

இதற்கு முன்பு, போர்க் குற்றங்களை இனப்படுகொலை என்று சர்வதேசம் பாகுபடுத்தி அதன் அடிப்படையில் அரசிற்கும் அரச தலைமைகளுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டது. அது சர்வதேச சட்டதிட்டங்கள் குறித்து முழுமையாக அறியாதவர்களின் கோரிக்கையாகவே இருந்தது.

அப்போது, அது விடயத்தை ஆறஅமரப் படித்து புரிந்து கொண்ட தமிழ் அரசு கட்சியின் செயலாளர் சுமந்திரன், அவ்வாறு நிகழ்வதற்கு வாய்ப்பே இல்லை என்று அறிவித்தார். எனவேதான், அப்போதிருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு அது போன்ற கோரிக்கைகளை முன் வைக்கவில்லை. ஆனால், அப்போதே சுமந்திரன் 'துரோகி' என்று மீண்டும் ஒரு முறை முத்திரை குத்தப்பட்டார். அன்று தொடர்ந்து இன்று வரையிலும் சுமந்திரனை எதிரில், எதிரணியில் நிறுத்தி அரசியல் செய்வது சிலருக்கு வாடிக்கை. பலருக்கு அது பொழுதுபோக்கு.

அதுவே இப்போதும் தொடருகிறது. செம்மணி புதைகுழி விவகாரத்திலும், ஆட்டைக் கடித்து, மாட்டை கடித்து பின்னர் சுமந்திரனை சமூக வலைதளங்களில் கடிக்கத் தொடங்கி உள்ளார்கள். அவர்களது கடியில் இருந்து காலம்சென்ற சம்மந்தன் இந்த முறையும் தப்பவில்லை.

வடிவேலு பாணியில் சொல்வதென்றால், சம்மந்தனும் சுமந்திரனும் 'ரூம்' போட்டு யோசித்துத்தான், இது போன்ற 'துரோக செயல்களை' செய்தார்கள் என்று தமிழ் மக்களை நம்ப வைக்க இன்னமும் ஒரு தரப்பினர் முயன்று வருகிறார்கள். என்ன, அவர்கள் ஒரு தரப்பில் இல்லையென்றால், இரண்டு அல்லது மூன்று தரப்பினர் என்றும் வைத்துக் கொள்ளலாம்.

என்றாலும் செம்மணிப் புதைகுழிகளை ஆராய சென்ற சுமந்திரன் கோட்-சூட்டுடன் தன்னையும் தன்னை சார்ந்த பிற சட்டதரணிகளையும் அங்குள்ள மக்களுடன் வேறுபடுத்திக் காட்டிக்கொண்டார். அங்கு, அவர் வேட்டி-சட்டை அணிந்து சென்றிருந்தால், அவர் அரசுத்தலைவர்சட்டதரணி இல்லைஎன்று யாராவது கூறி இருப்பார்களா என்ன? தேசிய அளவில், இது போன்ற அணுகுமுறைகள்தானே, மஹிந்த ராஜபக்சவையும் ரணில் விக்கிரமசிங்கேவையும் வேறுபடுத்தி காட்டின?



### அறிக்கை போர்

இந்தப் பின்னணியில், செம்மணி விடயத்தில் தமிழர் தரப்பு செய்யப்போவதுதான் என்ன? அல்லது செய்ய முடிவதுதான் என்ன? பச்சையாக சொல்லப்போனால், செம்மணி விவாகரத்தில் தமிழர் தலைமைகள் ஏன் உள்நாட்டு பொறிமுறைகள் மூலம் ஒரு விசாரணையை ஏற்றுக்கொள்ளக்கூடாது?

எது எப்படியோ, இப்போது உண்மை அனைத்தையும் கூற தயாராக இருப்பதாக கூறும் சிறைக் கைதியான சோமவன்ச ராஜபக்ச என்ற அந்த முன்னாள் படையினர் உள்ளிட்டோருக்கு கிருஷஜாந்தி மற்றும் அவரது குடும்பத்தினர் படுகொலை விவகாரத்தில் தண்டனை பெற்றுக்கொடுத்தது இந்த நாட்டின் நடைமுறை சட்டங்கள்தானே? அந்த தண்டனையைக் கொடுத்ததும், அதற்கெதிரான மேன்முறையீட்டு மனுக்களை நிராகரித்ததும் இங்குள்ள நீதித் துறைதானே?

இவ்வாறெல்லாம் கூறுவது, இங்குள்ள பலருக்கும் அதிர்ச்சியாக இருக்கலாம். ஆனால் தற்போது நாடும் தமிழ் சமூகமும் இருக்கும் நிலையில் அதற்கான அதிர்ச்சி வைத்தியமே தேவை. சர்வதேச நீதி, சர்வதேச நீதிமன்றம், சர்வதேச விசாரணை என்றெல்லாம் பேசுவதில் அர்த்தமில்லை என்பதை இங்குள்ள சமூக-அரசியல் தலைமைகள் இனியாவது புரிந்துகொள்ள வேண்டும். ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அத்தகைய புரிதல் இல்லாத காரணத்தினால்தான், இந்த தலைவர்களுக்கு தங்களது அறிக்கை போர்களுக்கும் அரசியல் நிர்பந்தங்களுக்கும் அடிபணிய இனியும் தமிழ் சமூகம் தயாரில்லை என்ற உண்மை புரிவதில்லை. என்றாலும், தங்களது ஒட்டு மொத்த வாக்கு சதவீதம் குறைவது, தங்களது அரசியல் மற்றும் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களுக்கு ஆள் சேர்க்க முடியாமை என்பன போன்ற சாட்சியங்கள் எல்லாம் அவர்கள் கண்களுக்குத் தெரிவதில்லை.

### ஓர் அளவிற்கு

செம்மணி போன்ற விடயங்களில் உள்நாட்டு பொறிமுறைகளை நம்பலாமா? அது போன்ற பொறிமுறைகளை எப்போதாவது தமிழ் சமூகம் நம்பிச் செயல்பட்டிருக்கிறதா?அதிலும் குறிப்பாக இந்த நாட்டின் நீதித் துறை, எப்போதுமே தவறிழைத்து வருவதான கூற்று ஏற்றுக்கொள்ள முடியாத விடயம்.

சோமவன்ச ராஜபக்ச விவகாரத்தை விட்டுவிடுங்கள். சமஷ்டி குறித்துப் பேசினாலே, அது தவறு என்று நாடாளுமன்றம் நிறைவேற்றிய சட்டம் கூறியபோது, அதற்கு எதிராக, தமிழர்களுக்கு ஆதரவாக உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கவில்லையா?

இதனை ஒரு வாதமாக முன்வைத்தால், இல்லை, இல்லை. இன்றைய ஜேவிபி ஆட்சியாளர்களின் மனுவின் அடிப்படையில்தான் கடந்த 2006, வடக்கு-கிழக்கு இணைப்பை உச்சநீதிமன்றம் ரத்து செய்தது என்ற எதிர்வாதம் தோன்றலாம். அது ஓரளவிற்கு உண்மை. ஆனால் ஓர் அளவிற்கு மட்டுமே உண்மை.

இதற்குக் காரணம் உண்டு. அப்போதைய தீர்வு திட்டத்தின் படி, விடுதலை புலிகள் அமைப்பு ஆயுதங்களை அரசிடம் ஒப்படைக்கவில்லை. மாறாக, அப்போது நடைமுறையில் இருந்த போர் நிறுத்த ஒப்பந்தத்தையும்கூட மீறிச் செயல்பட துவங்கி இருந்தது.

இடைப்பட்ட காலத்தில், அதே ஆயுதங்களை பயன்படுத்தி, அரச படைகளுடன் வருடக் கணக்கில் போர் புரிந்தது. அது போன்றே, நாட்டின் பல பகுதிகளிலும் தீவிரவாதத் தாக்குதல்களையும் மேற்கொண்டது.

இங்கு ஓர் அறிவுசார் வாதம் முன் வைக்கப்பட வேண்டும். தற்போது விடுதலை புலிகள் அமைப்பே இல்லாத காரணத்தினால், அவர்களின் வன்முறை தாக்குதல்களும் இல்லாத காரணத்தினால், வடக்கு-கிழக்கு மீள் இணைத்தல் விவகாரத்தை உச்ச நீதிமன்றம் முன் கொண்டு செல்ல முடியுமா?

அவ்வாறு முடியுமென்றால், இல்லையென்று சொல்லாமல், 1987-இல் மாகாண சபை சட்டம் கூறியது போல், கிழக்கு மாகணத்தில் வெகுஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும். அதற்கு சம்மதிப்பார்களா, நமது தமிழ் தலைவர்கள்?

### சூத்திரதாரி

எது எப்படியோ, இது போன்ற விடயங்களில் சட்ட நுணுக்கம் தெரிந்த சுமந்திரன் போன்றோரே, கருத்துக் கூறமுடியும். அதேசமயம், இந்நாட்டின் நீதித் துறையின் மாண்பும் நம்பகத் தன்மை குறித்தும், சுமந்திரன் போன்ற தமிழ் சட்டதரணிகளுக்கே அதிக அறிவும் அனுபவமும் உண்டு.

சுமந்திரன் ஆகட்டும், அவரைப் போன்ற பிற தமிழ் சட்டதரணிகள் ஆகட்டும், நாட்டின் நீதிதுறையை நம்பாமலா, தங்களது கட்சிகாராகளுக்காக, உச்ச நீதிமன்றம் தொடங்கி, கீழமை நீதிமன்றங்கள் வரை சென்று வாதாடுகிறார்கள்? வெற்றியும் பெறுகிறார்கள்?

அந்த விதத்தில், செம்மணி விவகாரம் குறித்து உச்ச நீதிமன்றத்தை அணுகி, சுயசார்பான நீதி விசாரணை கோரலாம். அல்லது, அரசை அணுகி, அரசுத் தலைவர் ஆணையத்தின் மூலம் விசாரணை கோரலாம். அதனை ஒட்டி, உள் நாட்டு பொலிஸ் மூலம் விசாரணை மேற்கொள்ள முயற்சி மேற்கொள்ளலாம்.

இவற்றிற்கும் அப்பால், நாடாளுமன்றக் குழுவின் மூலமும் ஒரே சமயத்தில் விசாரணையை முன்னெடுக்க முயற்சிகளை மேற்கொள்ளலாம். சுமந்திரன் இன்று நாடாளுமன்ற உறுப்பினராக இல்லை. ஆனால், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த நாடாளுமன்றக் குழு விசாரணையில் குறிப்பிட்ட பங்கு வகித்தவர். எனவே, அதன் நீள-அகலங்களை நன்றாக படித்து கற்றவர். அது போன்றே, சிறீதரன், கஜேந்திரகுமார், சாணக்கியன் போன்றோர் நாடாளுமன்ற நடவடிக்கைகள் குறித்து அனுபவம் பெற்றவர்கள்.

இல்லை என்று சொல்லாமல், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரத்தில், குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது இன்னமும் குற்றவியல் நடவடிக்கைகள் எதுவுமே எடுக்கப்படவில்லையே, என்ற கேள்வி எழலாம். அந்தத் தாக்குதலின் பின்னால் இருந்த சூத்திரதாரி யார் என்ற முடிவை பொலிஸ் அல்லது நீதிமன்றம் எடுக்காமல், கொழும்பு கத்தோலிக்க திருசபை பேராயர், மால்கம் கர்தினல் ரஞ்சித், தானே எடுக்க வேண்டும் என்பது போன்று, அரசிற்கு தொடர் அழுத்தம் கொடுத்து வருகிறார்.

### அதிரடி தீர்ப்பு

அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேனாவின் பதவிகால முடிவில், அடுத்த அதிபர் தேர்தல் வேட்பாளரான கோத்தபயா ராஜபக்சவை முன்னிறுத்தி கர்தினல் ரஞ்சித் அரசியல் செய்தார். பின்னர்;, கோத்தாபயாவை பெயர் சொல்லாமல், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரி அவரது அணியில் இருந்தவர்தான் என்பது போன்ற கருத்துகளைச் சுழலவிட்டார்.

தனது தேர்தல் வெற்றி முடிந்த கையோடு, அதனை தொடர்ந்து பதவியேற்றுக் கொண்ட கையோடு, தற்போதைய அரசுத் தலைவர் அநுரகுமாரவும் பேராயரைச் சந்தித்துக் கருத்துப் பரிமாற்றம் செய்தார். ஆளும் தரப்பினரின் பரம அரசியல் எதிரிகள் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பங்கு வகித்திருந்தால், அவர்களை இந்த அரசு சும்மா விட்டு வைத்திருக்குமா?

எது எப்படியோ, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த பொலிஸ் விசாரணையும் நாடாளுமன்ற விசாரணையும், அரசுத் தலைவர் ஆணையத்தின் இரண்டு- மூன்று விசாரணைகளும் ஒன்றும் செய்ய முடியாத நிலையில், உச்ச நீதிமன்றம் அதிரடியான தீர்ப்பை வழங்கியது. அதன் படி, முன்னாள் அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேனா, மற்றும் இரண்டு உயர் அதிகாரிகளுக்கு முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு அபராதம் விதித்து தீர்ப்புக் கூறியது.

அந்த அபராதத் தொகை, உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு பகிர்ந்து அளிக்கப்படவேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது. அதாவது, பொலிஸ் விசாரணை முடிந்து, கிரிமினல் வழக்குகளில் தீர்ப்பு வரும் வரை காத்திராமல், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான உதவி கிடைக்க நீதிமன்றம் வழிவகை செய்தது.

### சாட்சிப் பொருள்கள்

செம்மணி புதைகுழியில், அடையாளப்படுத்தப்பட்ட பொருள்கள் ஏராளம் கிடைத்திருக்கின்றன. இதன் மூலம், ஏதோ ஒரு சில குடும்பங்களாவது, இங்கே ஒற்றை செருப்பு, அங்கே ஒரு கிழிந்த சிறார் உடை என்று ஏதாவது சாட்சியங்களை வைத்து, இறந்தவர்கள் தங்கள் உறவினர்தான் என்று முடிவு செய்ய முடியும்

அதன் மூலம், இத்தனை வருடங்கள் சென்ற பின்னராவது, மனதளவிலும் தங்களது இழப்பை அவர்கள் ஏற்றுக்கொண்டு தங்களைத் தாங்களே சமாதானப்படுத்திக்கொள்ள முயற்சிக்க முடியும். ஒன்றுமில்லை என்றாலும், இதன் மூலம் தங்களது விடை கிடைக்காத கேள்விக்கு இப்போதாவது ஏதோ ஒரு விடை கிடைக்கும். அதனை ஏற்றுக்கொள்வதுதான் மிகவும் கடினம்.

இந்தப் பின்னணியில், உச்ச நீதிமன்றமோ அல்லது அரசோ, செம்மணியில் அநியாயமாக உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு தொகை கொடுப்பதாக அறிவித்தால், அதுதானே அவர்களுக்குத் தேவையானது! மற்றபடியான நீதி-நியாயங்கள், குற்றவாளிகளை தண்டிக்கும், ஆனால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு, அதுவும் இத்தனை வருடங்களுக்கு பிறகு என்ன பயன்?

# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDr
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.08.2025இல் வெளியிடப்பெற்றது